அலகுப்பரீட்சை (அலகு 3)
Unit Examination (Unit 3)

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தர) ப் பரீட்சை
General Certificate of Education (Adv. Level) Examination

அரசியல் விஞ்ஞானம் **Political Science**	23	T	I&II	2 மணி 30 நிமிடம் **Two hour 30 Minutes**

பின்வரும் 01 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்குப் பொருத்தமற்ற விடையினைத் தெரிவு செய்க.

01. அரசு என்பது
    1. ஆள்புலப் பிரதேசத்தில் காணப்படும் அனைத்து மக்களையும் சமூகக் குழுக்களையும் வழிநடாத்துகிறது.
    2. இது முழுச் சமூகத்தினதும் பொதுச் சித்தத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது.
    3. சமூகம் தோன்றுவதற்கு முன் அரசு தோன்றியது.
    4. அது மக்களின் நலன்களில் அக்கரை கொள்கிறது.
    5. அரசு சமூகத்தினால் தோற்றுவிக்கப்பட்ட ஓர் அமைப்பாகக் காணப்படுகிறது.

02. நவீன ஆள்புல அரசு என்பது
    1. அதிகாரப் பலத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக வரையறுக்கப்பட்ட ஆள்புலம் ஒன்றில் ஒழுங்கமைந்து காணப்படுகின்றது.
    2. ஆள்புலப் பிரதேசம், தேசிய அடிப்படை, அரசாங்கம், இறைமை என்ற பிரதான அங்கங்களின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
    3. ஓர் இனம் ஓர் அரசு என்ற கருத்துக்குட்பட்ட நவீன தேசம் - அரசு என்ற அரசியல் இயல்பினைக் கொண்டதாகும்.
    4. அரசின் இறைமை அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவது அரசாங்கமாகும்.
    5. கலாச்சாரப் பல்வகைமையை பாதுகாக்க முடியாத ஓர் அரசாகும்.

03. தேசிய அடிப்படை என்பது
    1. நவீன இனங்களின் தோற்ற வழிமுறையும் நவீன அரசின் தோற்ற வழிமுறையும் ஒன்றுக் கொன்று சமாந்திரமானவையாகக் காணப்படுகின்றது.
    2. நவீன அரசு தோற்றம் பெறுவதில் கற்புல சாதனமாக அமைந்தது தேசியவாதமாகும்.
    3. ஓர் அரசின் ஆள்புலத்தில் வாழும் மக்கள் அனைவரும் ஓர் இனம் என்பதனை வாதிடுகிறது.
    4. இதன் மூலம் தேசிய ஒற்றுமை, தேசிய உணர்வு என்பன ஏற்பவதனை எதிர்பார்க்க முடியாது.
    5. நவீன அரசுகள் தேசிய அரசுகள் என அழைக்கப்படுகின்றது.

04. இறைமையின் பண்புகள்

1. அரசு பெற்றிருக்கும் ஆகக் குறைந்த அதிகாரமாகும்.
2. அரசு பெற்றிருக்கும் ஆகக்கூடிய அதிகாரமாகும்.
3. இது ஏனையவர்களுக்கு கட்டளை பிறப்பிக்கும் ஆனால் ஏனையவரின் கட்டளைக்கு பணியாது.
4. அரசுக்கு அனைவரும் அடிபணிவைக் காட்டுவதுற்கு பிரதான காரணமாகும்
5. தன்னிகரற்றதும் வரையறையற்றதுமான அதிகாரம் எனக் குறிப்பிடலாம்.

05. அரசாங்கம் என்பது

1. அரசின் அதிகாரங்களையும் பணிகளையும் புரிவதற்கு பொறுப்பாக்கப்பட்ட அரசின் சேவகனாகும்.
2. அரசு என்ற கப்பலின் சுக்கானை இயக்குவதாகும்.
3. ஜனநாயக அல்லது புரட்சிகர செயற்பாடு மூலம் மாற்றியமைக்கக் கூடிய ஒரு அரசியல் நிறுவனமாகும்.
4. அரசின் ஆள்புலத்தில் வாழும் அனைத்து மக்களையும் கொண்ட ஒரு மானிடச் செயற்பாடாகும்.
5. சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகிய முத்துறைகளினூடாக செயற்படக்கூடியது.

பின்வரும் 06 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

06. உலகமயமாக்கல் என்பது

A. நவீன லிபரல்வாதப் பொருளாதார அரசியல் மறுசீரமைப்புக்களால் வசதியளிக்கப்பட்ட செயற்பாடாகும்.
B. ஆள்புலத்தின் அடிப்படையில் அமைந்த தேசிய அரசுகளுக்கு தற்போது இருப்பு இல்லை
C. இனம் என்பதற்கான முக்கியத்துவம் குறைவடைந்து செல்கிறது.
D. தேசிய அரசுகள் பலவீனமடைவது உலகமாயமாக்கலின் விளைவாகும்.
E. மூலதனம், தகவல்தொழிநுட்பம், மற்றும் மனிதர்களின் நிறுவனங்களின் வலயமைப்புக்கு தேச எல்லைகள் தொடர்ந்தும் அவசியப்படும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ABCE 5. ACDE

07. கிரேக்க நகர அரசின் பண்புகள்

A. அரசியல் தொடர்பில் ஒழுங்கமைந்த அரச முறையாகக் கருதப்படுகின்றது.
B. இங்கு பெண்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்பட்டது.
C. ஜனநாயகம் பிரசைகளுக்கான அரசியல் செயற்பாடுகள் அங்கு காணப்பட்டன.
D. மக்கள் தொகை மற்றும் ஆள்புலம் என்பன வரையறுக்கப்பட்ட சிறிய அரசியல் அலகாக இருந்தது.
E. இங்கு கோத்திர ஆட்சியில் இருந்த நிர்வாக முறைமைகள் காணப்பட்டன.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ABCE 5. ACDE

08. தாராள ஜனநாயக அரசின் பண்புகள்

A. வரையறுக்கப்பட்ட அரசு தொடர்பான எண்ணக்கருவே இதன் அடிப்படையாகக் கருதப்பட்டது.
B. லிபரல் வாதமும் நவீன ஜனநாயக வாதமும் ஒன்றுக்கொன்று சமனான வகையில் அபிவிருத்தியடைந்த அரசியல் எண்ணக்கருக்களாகும்.
C. இது முதலாளித்துவப் பொருளாதார முறையுடன் இணைந்த அரசியல் முறையாகும்.
D. மக்கள் ஆட்சி தொடர்பான எண்ணக்கரு முக்கியம் பெற வில்லை.
E. பிரதிநிதித்துவ ஜனநாயகம் செயற்படுவதற்கு சமத்துவம், மக்களாட்சி, யாப்புறுவாதம் போன்ற அடிப்படைப் பண்புகள் கட்டாயமானது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ABCE 5. ACDE

09. சமவுடைமை அரச மாதிரி என்பது

A. 17 ஆம் நூற்றாண்டில் அபிவிருத்தியடைந்த அரச முறையாகும்.
B. இதன் அடிப்படை மாக்ஸ்வாதக் கோட்பாடாகும்
C. முதலாளித்துவம், லிபரல்வாத அரசமாதிரிகளுக்கு மாற்றீடாக முன்வைக்கப்பட்ட அரசமாதிரியாகும்.
D. தனியார் முயற்சிகளுக்குப் பதிலாக அரச ஆதிபத்தியம் நிலை நிறுத்தப்படும்.
E. ரஷ்யா, சீனா, கியூபா போன்ற நாடுகள் இம்மாதிரியை பரிசீலித்துப் பார்துள்ளன.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ABCE 5. ACDE

10. பாஸிஸ அரசு என்பது.

A. எதேட்சையதிகாரம், இனவதம், இராணுவவாதம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது.
B. பாஸிஸவாதத்தால் அரசும் இனமும் சமமாகப் பார்க்கப்பட்டது.
C. இத்தாலியில் பெனிட்டோ முசோலினியும் ஜேர்மனியில் எடோல்ப் ஹிட்லரும் என்பவர்கள் இதன் தலைவர்களாவர்.
D. நீட்சே முன்வைத்த அதிசிறப்பு மனிதன் (superman) என்ற எண்ணக்க பாஸிஸ கருத்துத் தொடர்பாக பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளது.
E. நாயக்கர் வழிபாட்டினை இவ்வரசு வெளிக்காட்ட வில்லை.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ABCE 5. ACDE

பின்வரும் 11தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

11. பிரசை என்பவர்

1. பிரசை என்பது தற்போது அரசின் உறுப்பினன் என்று அர்த்தப்படுத்தப்படுகின்றது.
2. அரிஸ்டோட்டிலின் கருத்துப்படி பிரசை என்பவர் அரசின் செயற்பாடுகளில் மறைமுகமாக பங்குபற்றபவர்.
3. பிரசைகள் அரசுக்கு அடிபணிய வேண்டிய அவசியம் இல்லை.
4. பிரசைகளின் இயற்கை உரிமைகளை அரசு பாதுகாக்காமையால் அரசுக்கு பிரசை கட்டுப்பட்ட வேண்டிய அவரியமில்லை.
5. பிரசைகள் தீர்மானம் எடுப்பதற்கு மக்கள் பிரதிநிதியுடன் தொடர்படுவதில்லை.

12. சமூக ஒப்பந்தக் கோட்பாடு என்பது

1. இது கிரேக்க காலத்தில் தோற்றம் பெற்றது.
2. இக் கோட்பாட்டை கொப்ஸ், லொக், ரூஸோ போன்றோர் முன்வைத்தனர்.
3. சமூகத்தினுள் ஏற்பட்ட மோதலின் விளைவாக தோற்றம்பெற்ற கோட்பாடாகும்.
4. தெய்வீக உரிமைக் கோட்பாடு உயர்நிலையை அடைந்திருந்த சந்தர்ப்பத்தில் உருவானது.
5. மக்களின் இணக்கம் கருத்திற்கொள்ளப்படாமல் ஆட்சியதிகாரம் ஒப்படைக்கப்படுகிறது.

13. மாக்ஸ்வாதம் என்பது

1. முதலாளித்துவத்துக்கு முற்றுமுழுதாக ஆதரவாக முன்வைக்கப்பட்ட கோட்பாடாகும்.
2. சமவுடைமைப்புரட்சியின் பின்னர் அரசின் தேவை இல்லாது இருப்பதால் அரசு உதிர்ந்துவிடும்.
3. அரசு சொத்தற்றவர்களின் கருவி எனக் கூறுகிறது.
4. சந்தையை இலக்காகக் கொண்டு பொருள் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.
5. முதலாளிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதனை நோக்கமாகக் கொண்ட ஒரு கருத்தியலாகும்.

14. பெண்ணியல் வாதம் என்பது

1. அரசு தொடர்பான விசேட பெண்ணியல்வாதக் கோட்பாடு கிடையாது.
2. பால்நிலையிலிருந்து விடுபட்ட ஒரு வாதமாகும்.
3. பெண்ணியல்வாதிகள் நிச்சயமாக ஆண் மைய கருவியான அரசு பெண்கள் மீது ஆண்கள் உலகத்தை திணிக்கும் கருவியாக செயற்படுகிறது எனக் குறிப்பிடுகிறது.
4. அரசு என்பது பெண்களை மையப்படுத்தி உருவாக்கப்படுகின்றது.
5. மாக்ஸ்வாத பெண்ணியல்வாதிகள் முதலாளித்துவ அரசை ஏற்க வேண்டும் என கூறுகின்றனர்.

15. காலனித்துவ அரசு என்பது

1. ஐரோப்பா சமூகத்தினுள் விருத்தியடைந்த ஒரு அரசியல் கருத்தியலாகும்.
2. இலங்கை போன்ற கீழைத்தேய நாடுகளில் காலனித்துவ ஆட்சி இடம்பெற வில்லை.
3. வரலாற்று ரீதியாக ஐந்தாம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்த ஒன்றாகும்.
4. காலனித்துவ ஆட்சியில் யுத்த செயற்பாடுகளினால் காலனித்துவ அரசுகள் இராணுவ அரசுகளாகவே விருத்தியடைந்தன.
5. இது ஒரு வர்க்க அரசாகும்.

(15 x 2 = 30 புள்ளிகள்)

பின்வரும் வினாக்கள்ளுக்கு விடை தருக

01. ‘‘அரசு ஓர் சமூக நிறுவனமாவதோடு மனிதர்களின் உயர்வான பொதுநலனுக்காக செயற்படுவதால் சமூகத்தில் அது உயர்வானது ’’

‘‘அரசு என்பது வரையறுக்கப்பட்ட ஆள்புலப் பிரதேசத்தில் பலாத்கார அதிகாரத்தை பயன்படுத்தும் தனியுரிமை தமக்கேயுரியது எனக் கூறும் மனிதக் குழுவாகும்’’

மேறகுறிப்பிட்ட இரு கூற்றுக்களையும் முன்வைத்த அரசியல் தத்துவஞானிகளினது பெயர்களை முறையே குறிப்பிடுக.

1…… 2……

02. அரசாங்கம் மூன்று துறைகளைக் கொண்டிருக்கிறது அவற்றுள் இரண்டு துறைகளை எழுதுக.

1…… 2……

03. ஓர் அரசின் இறைமை இரு பகுதிகளைக் கொண்டுள்ளது அவற்றைக் குறிப்பிடுக.

1…… 2……

04. ‘‘ அரசு சொத்துடையவர்களின் கருவி ’’

‘‘ சமூகத்தில் ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவு’’ போன்ற கருத்துகக்ளுக்கு உரித்துடைய கோட்பாடுகள் எவை?

1…… 2……

05. தாராண்மை வாதத்தின் வகைகளில் இரண்டை குறிப்பிடுக

1…… 2……

06. ‘‘ பால்நிலையை அடிப்படையாகக் கொண்டது’’

‘‘ அரசு சர்வவல்லமை பொருந்திய தாபனமாகும்’’ மேற்கூறிய கோட்பாடுகளைத் தருக

1…… 2……

07. பின்காலனித்துவ அரசு, மாக்ஸவ்வாதம்

மேற்கூறிய சிந்தனைகளை முன்வைத்த சிந்தனையாளரக்ளை முறையே தருக

1…… 2……

08. நவீன ஆளப்புல அரசில் காணப்படும் விடயங்கள் இரண்டை எழுதுக

1…… 2……

09. ‘‘இவ்வரசியல் தாபனம் ஆள்புலத்தில் வாழும் சகல பிரசைகளையும் உள்ளடக்கியதாகும்.’’

‘‘இவ்வரசியல் தாபனம் ஆள்புலத்தில் வாழும் பிரசைகளுள் ஒரு பகுதியினரை மாத்திரம் உள்ளடக்கியதாகும்’’

மேற்குறிப்பிட்ட இரு கூற்றுக்களும் வெளிப்படுத்தும் அரசியல் தாபனங்களை முறையே எழுதுக.

1…… 2……

10. சமூக ஒப்பந்தக் கோட்பாடு இரு சமூக முறைமைகள் அடிப்படையில் கடடியெழுப்பப்பட்டுள்ளது அந்த இரு சமூக முறைமைகளையும் எழுதுக.

1…… 2……

(10 x 2 = 20 புள்ளிகள்)

பின்வரும் வினாக்களில் வினாக்களுக்கு விடை தருக.

01. பின்வருவனவற்றில் இரண்டை பரிசீலிக்குக.
    1. பிரதிநிதித்துவ ஜனநாய அரசுக்குத் தேவையான தாராள ஜனநாயகத்தின் பண்புகள்
    2. சமவுடைமை அரசின் மாதிரிகள்
    3. அரசும் பிரஜையும் (2 x10 = 20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றில் இரண்டை பரிசீலிக்குக.
    1. நவீன ஆள்புல அரசு
    2. நவீன தேசிய அரசு
    3. உலகமயமாக்கலும் அரசும்
    4. சமூக ஒப்பந்தக் கோட்பாடு (2x 10 = 20 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றில் ஒன்றை பரிசீலிக்குக.
    1. காலனித்துவ அரசு
    2. பாஸிஸவாத அரசு
    3. கிரேக்க நகர அரசு
    4. அரசும இறைமையும்
    5. அரசு அரசாங்கம என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு (1x 10 = 10 புள்ளிகள்)

விடைகள்

1- 3	2- 5	3- 4	4- 1	5- 4	6- 1	7- 5
8- 4	9- 2	10- 1	11- 1	12- 2	13-2	14-3
15- 4						

01. அரிஸ்டோட்டில்
மெக்ஸ் வெபர்

02. சட்டத்துறை
நிர்வாகத்துறை
நீதித்துறை

03. உள்இறைமை
வெளியிறைமை

04. மாக்ஸ்வாதம்
சமூக ஒப்பந்த கோட்பாடு

05. புரதான லிபரல்வாதம் - தலையிடா அரசு
நவீன லிபரல்வாதம் - நலன்புரியரசு
நவ லிபரல்வாதம்- குறைந்தபட்ச தலையீடு

06. பெண்ணியல் வாதம்
பாசிசம்

07. ஹம்ஸா அலவி
காள்மாக்ஸ்

08. வரையறுக்கப்பட்ட ஆள்புலப்பிரதேசம்
தேசிய அடிப்படை
அரசாங்கம்
இறைமை

09. அரசு
அரசாங்கம்

10. ஆரம்பகால இயற்கை நிலைச் சமூகம்
சிவில் சமூகம்